பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(01.03.2023 முதல் 05.03.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 017 (02) PJN/GKMS/2023 தேதி: 28.02.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (23.02.2023 முதல் 27.02.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -05.03.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/02 | 24/02 | 25/02 | 26/02 | 27/02 | | நாள்-1 01/03 | நாள்-2 02/03 | நாள்-3 03/03 | நாள்-4 04/03 | நாள்-5 05/03 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 31 | 31 | 31 | 31 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 31 | 31 | 32 | 32 | 32 |
| 19 | 21 | 21 | 19 | 20 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 2 | 2 | 2 | 2 | 2 | மேக மூட்டம் | 3 | 0 | 2 | 2 | 2 |
| 60-89 | 56-95 | 59-92 | 56-94 | 54-91 | ஈரப்பதம் (%) | 59-82 | 55-81 | 46-78 | 46-82 | 54-84 |
| 3 | 3 | 3 | 3 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 12 | 12 | 12 | 10 |
| வடக்கு வட கிழக்கு | வடக்கு வட மேற்கு | மேற்கு வட கிழக்கு | மேற்கு வட கிழக்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (01.03.2023 முதல் 05.03.2023 வரை):**

- **மார்ச் 01 தேதியில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.**
- மார்ச் 02 லிருந்து 05 வரை வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 23-32 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 46-84 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

மார்ச் 05 லிருந்து 11 வரை மழை (1.04 மி.மீ), அதிகபட்ச வெப்பநிலை (32.76 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (21.43 டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| எள் | விதைத்தல் | நெல் தரிசு எள் VRI (SV) 1 ஐ ஹெக்டேருக்கு 5 கிலோ என்ற அளவில் பிப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை விதைக்கலாம். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா அல்லது 2 கிராம் கார்பன்டாசிம் கொண்டு விதை நேர்த்தி செய்யவும். |
| பருத்தி | விதைத்தல் | நெல் தரிசு நார் பயிரான பருத்தி MCU 7 அல்லது SVPR 3 போன்ற ரகங்களின் பஞ்சு நீக்கிய விதைகளை ஹெக்டேருக்கு 7.5 கிலோ என்ற அளவில் விதைக்கவும். |

| | | |
|---|---|---|
| உளுந்து | பூக்கும் தருணம் | நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிருக்கு 2% DAP கரைசலை அதாவது ஏக்கருக்கு 4 1/2 கிலோ DAPயை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து பிறகு அடுத்த நாள் தெளிந்த நீரை 190 லிட்டர் தண்ணீருடன் கலந்து பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறு முறையும் காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு இலைகள் நன்கு நனையும்படி தெளிக்கவும். |
| நெல் | அறுவடை | நெற் வயலில் வடிகால் அமைத்து, மழை நீரை வடித்து, அறுவடை செய்தபின் நெல்லை 14-16 சதவிகித ஈரப்பதத்தில் சேமித்து வைக்கவும். |
| ஆடு | அம்மை நோய் | வெயில் காலத்தில் ஆடுகளுக்கு அம்மை நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே ஆடு வளர்ப்போர் தங்கள் ஆடுகளுக்கு அம்மை நோய் வரமால் தடுக்க வெயில் காலத்திற்கு முன்பாகவே அம்மை தடுப்பூசி போட வேண்டும். |

**குறுஞ்செய்தி:** நெல் தரிசு எள்ளை மார்ச் 15 வரை விதைக்கலாம்.

**முதல்வர்**